

நெல்லை மாவட்டம் பாபநாசம் நீர்த் தேக்கத்திலிருந்து பிசான பருவ சாகுபடிக்கு தண்ணீரை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார், நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. மாவட்ட ஊராட்சி தலைவர் ஜெகதீஸ் ஆகியோர் முன்னிலையில் திறந்து வைத்தார்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் நடைபெற்ற கலைஞர் தமிழ் சங்க 28, வது ஆண்டு விழாவினை கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். மேடையில் கலைஞர் தமிழ் சங்க நிறுவனர் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், எம்.எல்.ஏ.க்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார், எஸ்.மாங்குடி, பேச்சாளர்கள் புலவர் செந்தலை கௌதமன், சூர்யா கிருஷ்ணமூர்த்தி, மாவட்டக் கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன் ஆகியோர் உள்ளனர்.

### ‘தாட்கோ’ சார்பில் — ரூ.75 லட்சம் மதிப்பீட்டில்

# கண்ணகி நகரில் - கபடி உள் விளையாட்டு அரங்கப் பணிகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேரில் பார்வையிட்டு ஆய்வு!

சென்னை, நவ. 3 -

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 1.11.2025 அன்று பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நீர்வளத் துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் தாட்கோ திட்டத்துறை களின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

முதலாவதாக காரப்பாக்கத்தில் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் கட்டுமான பணிகள் நடைபெறும் பகுதியில், ஒக்கியம் மடுவு கால்வாயில் நீர்வளத்துறையின் சார்பில் 27.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளில் ஒரு பகுதியாக மடுவின் கரைகள் அகலப்படுத்தப்பட்டுள்ளதையும், நீர் தடை இன்றி செல்வதையும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து ராஜீவ் காந்தி நெடுஞ்சாலை அருகே ஒக்கியம் மடுவின் கீழ் பகுதியில், மடுவில் மேற்கொண்ட தூர் வாரும் பணிகள் மற்றும் வலது கரை சீரமைப்பு பணிகளால் நீர் தடையின்றி செல்வதையும், ஒக்கியம் மடுவின் மேல்பகுதியில் உள்ள தனியார் கல்லூரி பகுதியில் பணிகள் நடைபெற்று வருவதையும், நீர் தடையின்றி செல்வதையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து கண்ணகி நகர் பகுதியில் நீர்வளத்துறையின் சார்பில் 27.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளில் ஒரு பகுதியாக ஒக்கியம் மடுவின் இடது புறத்தில் தடுப்புச் சுவர் கட்டும் பணிகள் இயந்திரங்களின் உதவியுடன் விரைவாக நடைபெற்று வருவதையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) சார்பில் கண்ணகி நகரில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி விளையாட்டு மைதானத்தில், கண்ணகி நகர் பகுதியில் கபடி விளையாட்டு போட்டியில் ஆர்வம் உள்ள விளையாட்டு வீரர், வீராங்கனைகளை ஊக்குவிக்கும் வகையில் 75.00 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் பார்வையாளர் மாடம், உடற்பயிற்சி கூடம், பயிற்சியாளர் அறை, ஒப்பனை அறை மற்றும் செயற்கை தளத்துடன் கூடிய இரண்டு ஆடுகளங்கள் உள்ளடக்கிய கபடி உள்விளையாட்டு அரங்கம் அமைக்கப்பட்டு வருகிறது.

இந்த பணிகளை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கண்ணகி நகரைச் சேர்ந்த தங்கப்பதக்கம் வென்ற கபடி வீராங்கனை செல்வி கார்த்திகா ரமேஷ் மற்றும் பயிற்சியாளர்களுடன் நேரில் சென்று பார்வையிட்டார்.

நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் பள்ளிக்கரணை சதுப்பு நிலப்பகுதியில் இருந்து வெள்ளநீரை பக்கிங்காம் கால்வாய் வழியாக கடலுக்கு கொண்டு சேர்க்கும் வகையில், செம்மொழி சாலை எல்காட் பகுதியில் இருந்து 42.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1.700 கிலோ மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்டு வரும் இரண்டு கண்கள் கொண்ட பெரிய அளவிலான வெள்ள நீர் கடத்தி மூடு கால்வாய் அமைக்கும் பணியின் முன்னேற்றம் குறித்து தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் நெடுஞ்சாலைத் துறை அலுவலர்களுடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேலும் சோழிங்கநல்லூர் பகுதியில் சதுப்பு நிலத்தில் நீர் எளிதாக செல்லவதற்காக, மேடவாக்கம் மற்றும் சோழிங்கநல்லூரை இணைக்கின்ற வகையில் எல்காட் பகுதியில் நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள உயர்மட்ட பால த்தை பார்வையிட்டதுடன், மழைக் காலத்தில் வெள்ள நீர் தடையின்றி எளிதில் செல்லும் வகையில் பழைய பாலத்தை இடிக்கும் பணிகளை பார்வையிட்டு, விரைவாக இடித்து அப்புறப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளவும், சீரமைக்கவும் நெடுஞ்சாலைத் துறை அலுவலர்களை தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அறிவுருத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், துணை மேயர் மு.மகேஷ்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருப ரன்,நீர்வளத்துறை செயற்பொறியாளர் இரா. அருண்மொழி, கண்ணகி நகரைச் சேர்ந்த தங்கப்பதக்கம் வென்ற கபடி வீராங்கனை செல்வி கார்த்திகா ரமேஷ், துணை ஆணையர்கள், மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# நெல்லை கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில் நடைபெற்றது!

*நெல்லை, நவ. 3 -*

*நெல்லை கிழக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம், வள்ளியூர் மாவட்ட அலுவலகத்தில் நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில் நடைபெற்றது.*

*கழகத் தலைவர்,தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு தலைகுனியாது “என் வாக்குசாவடி வெற்றி வாக்குசாவடி” (28.10.2025) அன்று நடைபெற்ற பயிற்சி கூட்டத்தில் குறிப்பிட்ட SIR பணிகளை செய்வது சம்மந்தமாக முடிவு செய்யப்பட்டது.*

*அதன் அடிப்படையில் நெல்லை கிழக்கு மாவட்ட கழக அவசர செயற்குழுக் கூட்டம் வள்ளியூர் மாவட்ட கழக அலுவலகத்தில் நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில் நடைப்பபெற்றது.*

*பின்னர் நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் வாக்குச்சாவடியில் முழு கவனம் செலுத்தி, அனைத்து வாக்குச்சாவடிகளிலும் அதிகமான வாக்குகளை பெற அயராது உழைக்க வேண்டும்.*

*ஏழாவது முறையாக கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் ஆட்சி அமைக்க நாம் முழுமூச்சுடன் செயல்பட வேண்டும்.என்றார்.*

*நிகழ்வில் இராதாபுரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் மு.சிவ ராஜ், மாவட்ட பொருளாளர் ஜார்ஜ் கோசல், பொதுக்குழு உறுப்பினர்கள் பரமசிவ ஐயப்பன், கனகராஜ்,சாந்திசுபாஷ், ஒன்றிய செயலாளர்கள் ஜோசப் பெல்ஸி, எரிக்ஜூடு, சேவியர் செல்வராஜா,அலெக்ஸ் அப்பாவு, போர்வல் கணேசன், செல்வ கருணாநிதி, ராஜன், சுபாஷ் தங்கபாண்டி, நகரச் செயலாளர் மணிசூரியன், பேரூர் செயலாளர்கள் அயூப்கான், சேதுராமலிங்கம், கசமுத்து, தமிழ்வாணன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் மல்லிகா அருள்,முருகன், எஸ்.என். முருகன், மாவட்ட மகளிரணி தலைவி கமலாநேரு சுயம்புராஜன், அனுராதா சரவணன்,இளைஞரணி துணை அமைப்பாளர்கள் தில்லை ராஜா, மனோஜ், அறங்காவலர்குழு தலைவர் அசோக் குமார்,ஜோசப் சந்திரன், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் தவசிராஜன், ஆதிபாண்டி, இசக்கிபாண்டி, கோபி கோபால கண்ணன், சுரேஷ், நேவில், செல்வ ராஜ், ஜார்ஜ்,சேகர், லெட்சுமணன்,தகவல் தொழில்நுட்ப அணி சரவணன், வழக்கறிஞர் பாலசந்தர், சுப்பிரமணி, செல்வின், மணிகண்டன், ஆனந்த், சுரேஷ், சுரே ஷ்பாக்கியம், மாவட்ட பிரதிநிதி நயினார், ராஜகோபால், முத்துராஜ், இலங்காமணி, ராஜா உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.*

### தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு

## மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர்
### டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர்/பொறுப்பாளர் ஒப்புதலோடு திருப்பூர் தெற்கு, விழுப்புரம் தெற்கு ஆகிய மாவட்ட தி.மு.க. சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**திருப்பூர் தெற்கு மாவட்டம்**

**தலைவர்:-** ஜெ. நவாஸ் 55, விஜயகணபதி நகர், சூளேஸ்வரன்பட்டி அஞ்சல், பொள்ளாச்சி - 642006, திருப்பூர் மாவட்டம்.

**துணைத் தலைவர்:** எஸ். சையது ஹக்கீம் 3/107, மின் நகர், உடுமலை சாலை, மாக்கினாம்பட்டி அஞ்சல், பொள்ளாச்சி - 642003, திருப்பூர் மாவட்டம்.

**அமைப்பாளர்:** வி.என். ஷாஜகான் 115, செல்லமுத்து வீதி, உடுமலைப்பேட்டை - 642126, திருப்பூர் மாவட்டம்.

**துணை அமைப்பாளர்கள்** : 1) அ. அபிபுர்ரஹ்மான் 1/82, பள்ளிவாசல் வீதி, சோழமாதேவி அஞ்சல், மடத்துக்குளம் - 642113, திருப்பூர் மாவட்டம். 2) அ. ஹீமாயூன் 79எ, பள்ளிவாசல் வீதி, உடுமலைப்பேட்டை - 642126, திருப்பூர் மாவட்டம். 3) எஸ். முகமது இஸ்மாயில் 43, கோசா வீதி, கணியூர் அஞ்சல், மடத்துக்குளம் - 642203, திருப்பூர் மாவட்டம். 4) டி. கிதியன் சுரேஷ் 5, என்.ஜி.ஜி.ஒ. குடியிருப்பு, சூளேஸ்வரன்பட்டி அஞ்சல், பொள்ளாச்சி - 642006, திருப்பூர் மாவட்டம். 5) நா. மாலிக்கராஜ் 3/388, தி திரட் பார்க், குடிமங்கலம், உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம் - 642201. 6) ஏ. ராபர்ட் அம்மே கவுண்டனூர், கஞ்சம்பட்டி அஞ்சல் - 642003, பொள்ளாச்சி, திருப்பூர் மாவட்டம்.

**விழுப்புரம் தெற்கு மாவட்டம்**

தலைவர்: எம்.எஸ்.கே. அக்பர் 226, காமராஜர் நகர், அரகண்டநல்லூர், திருக்கோவிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

துணைத் தலைவர்: அ. அந்தோணி 81, வடக்கு தெற்கு தெரு, செ. புதூர், மூட்டத்தூர் அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

**அமைப்பாளர்** : பிரேமா அல்போன்ஸ் ஆற்காடு மெயின் ரோடு, ஆயந்தூர் மற்றும் அஞ்சல், கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

**துணை அமைப்பாளர்கள்** : 1) எம். விக்டர் பவுல்ராஜ் 1114, மாதா கோவில் தெரு, முகையூர் மற்றும் அஞ்சல், கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 2) கே. பவுல்ராஜ் ஒதியத்தூர் மற்றும் அஞ்சல், திருக்கோவிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 3) ஆ. அஞ்சலீனா பிள்ளையார் கோவில் தெரு, செல்லங்குப்பம், திருக்கோவிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 4) த. அருண்குமார் டவி தெரு, நங்காத்தூர், விழுப்புரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 5) ப. பிராங்கினின் பெட் மாதா கோவில் தெரு, ஒட்டன்காடுவெட்டி, மாம்பழப்பட்டு மற்றும் அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 1.11.2025

டாக்டர் **அ.சுபேர்கான்**
செயலாளர், தி.மு.க.
சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு

# இராயபுரம் மண்டலத்தில் புதிய திட்டப் பணிகள்!

சென்னை, நவ.3

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, நேற்று முன்தினம் (01.11.2025) இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, இராயபுரம் மண்டலத்தில் துறைமுகம் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி யின் மூலதன நிதியின் கீழ், பல்வேறு புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டிப் பணிகளைத் தொடங்கி வைத்தார்.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவர், துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, இராயபுரம் மண்டலத்தில், துறைமுகம் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ், வார்டு–59ல், டி.என்.பி.எஸ்.சி சாலையில் ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பல்நோக்கு மையம் கட்டத்திற்கான கட்டுமானப் பணி, வார்டு–57ல், வ.உ.சி. சாலையில் ரூபாய் 75 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பல்நோக்கு மையம் கட்டடத்திற்கான கட்டுமானப் பணி மற்றும் வார்டு–54ல், வால்டாக்ஸ் சாலை, திருப்பள்ளி தெரு எதிரில் ரூபாய் 65 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலைக்கடை கட்டடத்திற்கான கட்டுமானப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டிப் பணிகளைத் தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் வார்டு 59 ஐசக் தெருவில் ரூபாய் 79 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பல்நோக்கு மையம் மற்றும் வார்டு55, போர்ச்சுகீஸ் சர்ச் தெருவில் ரூபாய் 170 இலட்சம் மதிப்பீட்டில் சென்னை நடுநிலைப்பள்ளியில் பழுதடைந்த கட்டிடத்தை மட்டும் இடித்து, தரைத்தளத்தில் புதியதாக 5 எண்ணிக்கையிலான வகுப்பறைகள் மற்றும் சமையல் கூடத்துடன் கூடிய புதிய கட்டிடம் அமைக்கும் பணிகள் என மொத்தம் ரூபாய் 4.49 கோடி மதிப்பீட்டிலான 5 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டிப் பணிகளைத் தொடங்கி வைத்தார். இப்பணிகளை உரிய தொழில்நுட்ப வழிகாட்டுதலுடன் மேற்கொள்ளவும் விரைவாக முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டுவர அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மேலும், அமைச்சர், அப்பகுதியில் உள்ள பொதுமக்களுடன் கலந்துரையாடி தேவைகள் மற்றும் குறைகளைக் கேட்டறிந்து அதன் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்நிகழ்வுகளின் போது, மேயர் திருமதி ஆர்.பிரியா, வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத் தலைவர் பி. ஸ்ரீராமுலு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் (வடக்கு) திருமதி.விமலா ராணி, உணவுப் பொருள் வழங்கல் துறை உதவி ஆணையாளர் திருமதி கற்பகவள்ளி, உதவி கல்வி அலுவலர்கள் தணிகைவேலு, திருமதி வேதவல்லி, மாமன்ற உறுப்பினர்கள் ல. நவீன் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### தருமபுரி மாவட்டத்திற்கு வருகை தரும்

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

## கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆ.மணி எம்.பி அறிக்கை!



*தருமபுரி, நவ. 3 -*

*தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர்,தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணியின் மகன் ஏ.எம்.பிரகதீஸ்வரன்ஜி. மதுபிரதிக்ஷா ஆகியோரது திருமணம் தருமபுரி ஜோதி மகாலில் இன்று( நவ 3) நடைபெறுகிறது.இத்திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைக்க திமுக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தனி விமானத்தில் புறப்பட்டு காலை 9 மணிக்கு சேலம் விமான நிலையம் வந்தடைகிறார்.பின்னர் சாலை மார்கமாக தருமபுரிக்கு வருகை தரும் அவர் திருமணவிழாவில் பங்கேற்று மணமக்களுக்கு வாழ்த்துரை வழங்குகிறார்.*

*தமிழ்நாடு முதலமைச்சரின் தருமபுரி வருகையை ஒட்டி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மகேஸ்வரன் தலைமையில் பாதுகாப்பு பணிகள் பலப்படுத்தப்பட்டுள்ளது.*

*இது குறித்து தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வழக்கறிஞர். ஆ. மணி எம்.பி விடுத்துள்ள அறிக்கையில் எனது மகன் திருமணத்தில் கலந்து கொள்ள தருமபுரி வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர் கழகதலைவர் அவர்களை சிறப்பான முறையில் வர வேற்றிட கழக முன்னாள் நாடாளுமன்ற,சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, ஒன்றிய,பேரூர், கழகத்தினர்,அணிகளின் அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள், கிளை கழகத்தினர், கழக முன்னோடிகள் என அனைவரும் திரளாக பங்கேற்க வேண்டும் என்று தருமபுரி கிழக்கு மாவட்டச் செயலாளர் ஆ.மணி எம்.பி. கேட்டுக் கொண்டுள்ளார்.*



உடுமலை நகராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கான நலவாரிய அடையாள அட்டை மற்றும் நலத்திட்டங்களை வேலுச்சாமி தலைமையில் ஆணையாளர் ஜெ. விநாயகம் ஏற்பாட்டில் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நலவாரிய தலைவர் திப்பம்பட்டி வெ. ஆறுச்சாமி நலவாரிய அடையாள அட்டைகளை வழங்கினார்.



நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஊராட்சி ஒன்றியம், குஞ்சப்பனை ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் கலந்து கொண்டு ஊராட்சியில் நடைபெற்ற மற்றும் நடைபெறவிருக்கும் பணிகளை கூறி பொதுமக்களிடம் கலந்துரையாடினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக பொறுப்பாளர்.கே. எம். ராஜு, அவைத் தலைவர் போஜன், நகர மன்ற தலைவர் ஜெயக்குமாரி, ஒன்றிய செயலாளர் நெல்லை கண்ணன், ஒன்றிய செயலாளர் பீமன் உட்பட அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.